T04169
R001J06

மெய்வழி

# ...ன் ஆனந்தக்களிப்பு

- 103 -

177


32

4169

(மா) மாசிலாமணி பிள்ளை பி.ஏ.

(உரிமை பதிவுற்றது)

1973
தமிழ்
4169
R6
G6



மகரிஷி மார்க்கநாத ஆண்டகை

(தவநிலை)

குருமயம்

# முன்னுரை

இச்சிறு நூலுக்கு முன்னுரை யாதுந்தேவையில்லை யாயினும் ஆரம்ப நூலாகையால் இது தோன்றிய காரணத்தைமட்டுஞ் சொல்லுதல் மிகையாகாது.

மக்களின் இம்மை யென்னும் இவ்வுலக வாழ்வில் இகம் பரம் என்ற இருகூறு உளவென்றும் மானிட உடலைப் பெற்ற பெரும் பயனும் இம்மையிலேயே பரமென்ற மேலான வாழ்க்கை நிலையை அறிந்தடைதலா மென்றும் உலகோர் புகழும் ஞானப் பெரியோர் களும் அவரது நூல்களுந் தெளிவுபட ஊன்றி உரைத்தும் இக் காலத்து மக்களிடையே பரவாழ்க்கையும் அதன் சாதனங்களும் பெரும்பாலுங் காணுதொழிந்தன. பரநிலையின் வழியை யறிந்து அதிற் செல்லவேணுமென்ற அவாவினுற் சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாக உழைத்துவரும் எனக்கு பரவழியையறிந்து போதிக்க வல்ல பெரியார் எவரும் தமிழ் நாட்டில் முதலிருபது ஆண்டு களிற் காணப்படவில்லை. பரமென்றதையே அறியாதவர்களும் மக்கள் இறந்த பின்னரடையும் மறுமையையே பரமென்று திரித்துப் பொருள்கொண்டு மயங்கினவர்களும் நாட்டில் நிறைந் துள்ளார்கள். நல்லூழினுலும் நல்லொழுக்க விணக்கங்களினுலும் பரவாழ்க்கைப் பரம்பரையில் அதரித்த ஓர் ஞானசித்தரின் தரிசன முங் கடாக்ஷமும் ஐந்து ஆண்டுகளுக்கு முன் எனக்கு வாய்த்த பின்னர் வேதம் புகழும் பரவாழ்க்கை நிலையையும் அதன் இலக் கணங்களையுஞ் சாதனங்களையும் அதனைக் கைப்பற்றும் உபாயத்தை யும் அறிந்து கொண்டேன். அது முதல் என்னைத்தடுத்தாட் கொண்ட பரஞானச் செல்வரின் பாதநிழலிற் படிந்து பரவாழ்க்கை நிலையிற் பழகிவருகிறேன்.

இந்நிலையில், பொய்ச்சார்ப்பிலிருந்து விலகி மெய்ச்சார்ப்பை யடைந்ததினுலுண்டான தவறில்லாததும் மெய்யானதுமான இக போதனைகளையும் சரியையாதி நால்வகை பரஞான சாதனங்களின் உண்மை இலக்கணங்களையும் அநுபவங்களையும் நான் கண்டுணர்ந் தனவற்றை என்போல் பரவாழ்க்கையிற் பழகும் அகவினத்தோ ராகிய எனது உயிர்ச்சகோதர்களும் பரநிலையை யடைய அவா வுறும் புறவினத்தோராகிய மற்றைய நண்பர்களுந் தெரிந்து கொண்டு நலன் அடையவேண்டுமென்ற பூரண விருப்பத்தினுல் "வாழ்வனைத்துந் தந்தெனது குலமுழுதுந் தனையாண்டு வளர் வித்துவரும்" பரம காமீலாம் எனது சற்குருநாயகமும் இரக்ஷக கருமாகிய ஆண்டகை அவர்களின் அநுமதியைப் பெற்று இச்சிறு நூலை இயற்றிப் பிரசுரஞ் செய்திருக்கிறேன். என் அநுபவ நிலையை இதுவரையிலடையாத எனது உயிர்த்தோழர்களுக்கு அவர்களுடைய மெய்யுணர்வையும் நன்முயற்சியையுந் தூண்டிவிடு வதற்கு இந்நூல் சிறிதளவு உபயோகமாகுமென்முல் இதை அச்சேற்றிப் பிரசுரஞ் செய்ததனுலாய பயனை யான் அடைந்த வனுவேன்.

இந்நூலுக்குப் பிரேரப கர்த்தராகிய எனது ஞானத் தந்தையார் மகரிஷி மார்க்கநாத ஆண்டகை அவர்களின் திருப் பாத கமலங்களில் இதனைச் சமர்ப்பிக்கின்றேன்.

—ஆக்கியோன்.

"உமாப்பக்ஷி யின்னேக்கு மாவே யறியுமலால்
ஊமக்கோட் டானுணரு மோ"

—ஞானக்குறள்.

ஆதியே துணை

4169

குருமயம்

பரமகுருவடி சார்தலிற்றோன்றும்

# சீடன் ஆனந்தக் களிப்பு

(மெட்டு)

சங்கர சங்கர சம்பு—சிவ
சங்கர சங்கர சங்கர சம்பு

(வானவே தாந்தச் சஞ்சீவி—குரு)

சத்தியஞ் சத்தியங் கேண்மின்—குரு
சரணடி சென்னியிற் சாரவுஞ் செய்மின்

## குருஸ்துதி

அன்பருக் கன்பான மெய்யர்—ஐயர்
ஆனந்த மார்க்கமெய் யருட்குரு நாதர்
தன்பாதஞ் சென்னியில் வைத்தார்—என்னைத்
தானறிந் தேன்மலந் தான்துறந்தேனே
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 1

## பொய்ச்சார்பு

போய்வேட வஞ்சரைப் போற்றி—பொழுது
போக்கினேன் வாணாளும் மோசமே போகா
தாட்கொண்டா ராண்டகை சித்தர்—ஐயர்
தாடலைக் காட்டியே தமியேனைக் கார்த்தார்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 2

நான்றானே பரமென்று சொல்லி—நாக்கில்
நரம்பில்லா நயவஞ்ச நாகரை நம்பி
நானுமே நரகத்தி லாழ்ந்து—நாளும்
நலங்குலை யாமலே நல்லருள் தந்தார்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 3

மெய்ப்பொறி யறியாத வீணர்—மேலும்
மெய்யறி விளையாத வேற்றறி வாளர்
தன்னையே தம்பிரா னென்று—தணியாத்
தாகமோ கங்களைத் தலைமேலே சுமந்தார்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 4

தாடியுஞ் சடைமுடி தாங்கி—பரித்த
தலைமொட்டை முக்காடு தரிக்கவு மோங்கி
பாடியும் படித்துமே திரியும்—பவ
பாதக வேடரைப் பார்த்தாலும் பாவம்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 5

பரமென்ற பேச்சையே யறியா—மனுப்
பதர்களின் சேர்க்கையும் பரந்திடப் பெற்றேன்
பரமென்றுற் பாரினை விட்டு—பரவும்
மறுமையே பரமென்று மதித்தாரோ கயவர்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 6

பரிதியைக் காணுமோ கூகை—மனுடப்
பருவுடல் தாங்கிய பகவானின் பாதம்
பற்றவும் வருவாரோ வெளியில்—மடம்
பற்றியே ஏய்த்துண்ணும் பாஷாண்ட ஞானி
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 7

வாருங்கள் போய்வேடம் வேண்டாம்—வம்பு
வாதங்கள் பேசியும் வாயினுல் ஞானம்
கற்றதை யெட்டுணை காண—காவி
காஷாய வுடைபூண்டுங் கண்டது மூண்டோ
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 8

## ஆண்டானருள்

மெய்க்குரு காணும லுயிரும்—வாடி
மின்னுளைக் காணுமல் மெய்யுடல் தேடி
இவ்வண்ண மூசாடு மென்னை—எங்கள்
எழில்வண்ண நாதனு மேற்றடி தந்தார்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 9

வாயினுல் ஞானங்கள் பாடி—பேய்
வாய்போலே திரிவாரை வணங்கியே நின்ற
தமியேனைத் தயவுடன் தேடி—நல்ல
தாயினுஞ் சாலவே தன்னருள் தந்தார்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 10

விளையாடப் போனதன் மைந்தன்—விரும்பி
வீட்டினை நாடியே மீளாமற் போனுல்
வாடியே தாயவள் கூவி—வலிய
வாயினிற் பாலூட்டும் வரிசைபோ லன்றோ
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 11

மக்களை யாட்கொள்ளும் ஐயர்—மறந்து
மாடுபோல் திரிகின்ற மாந்தரைக் கூவி
ஆடுந்தன் னருங்கூத்தைக் காண—தன்னில்
ஆனந்தம் பொங்கவே யாகோல் காட்டும்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 12

இம்மையிற் பரமென்று சொல்லி—எனக்கு
இமையாத நாட்டமு மெளிதினில் விளக்கி
அசைவிலா பரநிலை யடைய—ஐயர்
அழிவிலா மெய்வழி யடக்கமாய்ச் சொன்னார்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 13

சொன்னசொல் லேதென்று சொல்வேன்—சிவன்
சொல்லாத சொல்லையுஞ் சொல்லாமற் சொன்னார்
கண்ணாரக் கேட்டுமேட் கொண்டேன்—நல்ல
கட்செவி மானநன் காடினேன் மோடி
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 14

ஊதினார் புத்துயி ரென்னுள்—உற்று
ஊதவு மோடின ருலகமாய் மாலர்
காரியக் குருக்களெல் லோரும்—என்னைக்
காணவுங் கூசினார் காணும லேசினார்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 15

அன்பிலா வண்டர்கள் காண—அருள்
ஆகாய மேனிய ரன்புயிர் வடிவர்
பொன்னடி தலைமிசை வைத்தார்—பொய்யன்
பொல்லாத நாயேனைப் பொற்பணிக் கேற்றார்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 16

அடியேனை யாட்கொண்ட திறமே—இந்த
அறிவாரே யனைத்தையு மறிந்தவ ராமே
குருபாதங் கொண்டவர் முத்தர்—அன்றிக்
குறைகோர்வங் கொள்ளச்சீர் குலைந்துமே போகும்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 17

## மெய்ச்சரியை

ஆலயந் தொழுவது நன்று—ஆனால்
ஆலயங் காயமே யறிந்துநீ தொழுதால்
குவலயஞ் சுற்றிட வேண்டாம்—கூகூ
கூக்குர லிட்டுநீ குலவுதல் வேண்டாம்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 18

ஆதிக ணேசனே காப்பு—ஐயன்
ஆதிக ணபதி யறுமுக னுன்னில்
அறிந்துநீ யடிமையுங் கொண்டால்—ஐயோ
அரசடி தோறும்நீ யலைந்திட வேண்டாம்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 19

எல்லோரு மோர்குலம் பாரு—இதை
எவருமே யறியாம லிடருற்றுப் போனார்
தன்தேய்வம் பிறர்க்கில்லை யென்னும்—தாசித்
தாய்மகன் சோல்லைநீ தட்டியே றென்றார்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 20

பேதமை கொண்டதே பெண்ணும்—பேசும்
பெண்ணுக்கு மாணுக்கும் பேதமே யில்லை
பெண்ணினைப் போற்றுநீ யென்றும்—பேசாப்
பெண்ணல்லோ பார்பதி பெறுகதி யென்றார்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 21

பேதமை கொண்டோர் பெண்ணும்—பெத்தர்
பேசரும் ஞானத்தைப் பெறுவது மெளிதே
நீயுமோர் பெண்ணையு மொத்தால்—நிமிஷம்
நீணு மற்றிடம் நிற்கலா மென்றுர்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 22

தலமூர்த்தி தீர்த்தமு மென்பார்—தங்கள்
தாயுமா ஞரவர் தவஞானி யென்பார்
தாயாகு மவர்சொல்லைப் பற்றுர்—திவ்ய
தலமூர்த்தி தீர்த்தமுந் தருபல னென்ன
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 23

சற்குரு சரணடி யடைதல்—சற்றுஞ்
சலிக்காம லவர்பணி தலையாலே யேற்றல்
கற்பவை கற்றுணர்ந் தடங்கல்—என்றுங்
கட்கிமை யொத்தவர் காலடி சார்தல்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 24

சார்தலே சரியையின் முடிவு—சாற்றுஞ்
சரியையு முடியுமுன் சாருடல் போஞல்
பூரணஞ் சேர்கதி யில்லை—என்று
பூரண வேதமே புகலநம் ஔவை
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 25

மேலான மானிடத் தேகம்—உன்னில்
மெய்யான பரமனை வெளியாக்கு மென்றுள்
மெய்பொய்யைப் பிரித்துமே காட்டும்—யோக
மெய்க்குரு சரணடி மேவியே நிற்பீர்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 26

இவ்வுல கியற்கையு முன்னர்—இன்னே
இப்பிறப் பொழிந்தாலே எப் பிறப் பாமோ
என்றசொல் மனந்தனிற் கொள்ளார்—இறந்தும்
இப்பாரில் திரும்பவு மிளெஞராய் வருவோம்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 27

அப்போது கொள்ளலாங் குருவை—என்ற
அற்பநி னைவினல் அவமதிற் சேர்வார்
கெடுபுத்தி கொள்ளுவார் மேலும்—தமக்குக்
கீழான கதியுமே கிட்டுவ தில்லை
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 28

சேர்வதும் மேலான நிலையே—என்றார்
தேர்மணி வாசகர் திருமொழி கேளீர்
முனிவராய்த் தேவராய் வாழ்ந்தும்—பின்னும்
முதற்குறை மனிதனுய் முளைத்துளே னென்றார்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 29

இறைநாமஞ் சொல்லியே காலம்—போக்கி
எழில்சின்னஞ் தரித்துமே யியல்பாக வாழ்ந்தால்
இறையருள் கிட்டிடு மென்றும்—அயல்
இறைவனே சேவையு மீன்றிடு மென்றும்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 30

மற்றுமோர் குருவரு ளேதற்கு—என்றும்
மதிகெட்டுப் போவாரோ மான்மழு வினத்தோர்
தக்ஷிணு மூர்த்தியைப் பாரீர்—திவ்ய
தக்ஷிண குமரனின் சரிதமுங் கேளீர்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 31

மூவருங் காணுத மூர்த்தி—ஜோதி
முருகவேள் குமரனை முன்னுளில் தந்தார்
தேவரு மடைக்கலங் கொண்டார்—திவ்ய
தேவரி னூழ்வினை சேகுத்தானே முதல்வன்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 32

சேகுத்தவன் பேர்குரு நாதன்—தெய்வச்
சீர்காழிப் பாலனுய்த் திகழ்ந்தவ னவனே
ஞானப்பா லுண்டானே யவனும்—வாலை
ஞானப்பா லுண்ணுமல் நண்ணுமோ ஞானம்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 33

சிற்றினஞ் சேரவும் வேண்டாம்—சிறந்த
சித்தர்சூழ் வாலையுஞ் சற்குரு தேவி
குருநாதன் வாலையின் வர்க்கம்—என்றுல்
குருவரு ளில்லாமற் கோனரு ளுண்டோ
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 34

## மெய்க்கிரியை

பொய்மெய்யும் பகுத்தறி யாரே—ஐயா
பூஜையு மென்பது பூவோடு நீரோ
கொர்வத்தை விட்டுநீர் சொல்லும்—கை
கிட்டின பலனையான் கேட்டிடச் சொல்லும்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 35

மந்திரங் கற்றபே ரையா—பேசா
மந்திரங் கற்றீரோ மதியுள்ள நீரும்
வட்டமா சித்தியே கிரியை—வருந்தி
மறவாம லடைவீரேல் மதியோகஞ் சாரும்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 36

சத்தியுங் கணபதி வேலன்—அனுமன்
சக்கர பூஜையைச் சார்ந்த பேரையா
சக்கர நெறிநில்லும் நீரும்—வேட்டாச்
சக்கர மல்லவோ சாமீப யந்த்ரம்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 37

அருச்சுனன் பூஜையைப் பற்றும்—அறிந்து
அம்பலக் கூத்துவ னருளைநீர் வேண்டில்
திருவுடை தேசிகன் பாத—பூஜை
சேர்ந்திடு மேயுமை பாகனின் பாதம்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 38

பாற்கட லோங்கிறை யென்றார்—பாரும்
பருவுடல் சீவனுந் திரைநுரை குமிழி
துகள்சீவன் கடலிறை யாமோ—தேவ
தூதனு மாட்கோண்டாற் றோல்லிறை யாமே
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 39

ஒப்புயர் வற்றசா கரத்தை—ஒப்ப
ஒக்குமோ வுருள்திரை வோலித்துமே நின்றால்
உய்வித மேவ்வித மேன்றேன்—உள்ளம்
உருள்திரை யற்றிட முரைகட லேன்றார்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 40

இல்லறங் காண்பது நன்று—இசைந்து
இல்லாளைக் காணவுன் னினத்தாரைப் போற்று
இல்லாளு மில்லத்தி லிருக்க—இனி
இல்லாத தோன்றில்லை யென்றுமே சொன்னார்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 41

இல்லாளே யின்பத்துக் காதி—இவள்
இருப்பையும் பார்க்கவுன் னிறைவனை நாடு
இல்லாளு முன்னிடங் கூட—இனி
என்றைக்கு மிறப்பில்லை யென்றுமே சொன்னார்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 42

வீட்டினி லேயொரு இல்லாள்—மன
வீட்டுக்குள் ளேவேத வேதாந்தத் தாயி
பேச்சாளி கொண்டாள்சிற் றின்பம்—உன்னைப்
பேசாம லழைப்பவள் பேரின்பங் கொண்டாள்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 43

சிற்றின்பங் கண்டகே ழிக்க—சேமஞ்
சிறக்கவே பேரின்பஞ் சேரும்பா ரென்றார்
இப்படிக் கெனக்குமே யாரும்—இனிய
இதமான கருத்தையு மிசைக்கவே யில்லை
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 44

என்னென்று போற்றுவேன் யானும்—என்னை
எற்றடி யிறுத்திய யெந்தையின் மாண்பை
பொய்மல மறுப்பவ ரவரே—பொல்லாப்
பொய்யொன்றும் புனைந்துான புகலவு மில்லை
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 45

## பொய் மலயோகம்

யோகத்தைக் கண்ணுரா மாந்தர்—மல
யோகத்தைக் கூடியே யொழிந்துமே போனார்
யோகாந்தங் கண்டவென் னையர்—அமல
யோகத்தி லடியாரை யுறையவே செய்வார்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 46

ஆகாத ஹடயோகஞ் செய்து—ஐயோ!
அனியாய மாகவே ஆருயிர் போக்கும்
அறிவுள்ள வினத்தோரே நீங்கள்—ஐயர்
அடியிணைப் பற்றியோ கானந்தம் பெருமின்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 47

மூச்சையி ழுப்பதோர் யோகம்—அதை
முழுதும டைத்துப்பின் மூச்சாடல் யோகம்
நாக்கடி யறுப்பதும் யோகம்—நல்ல
நாரியர் தூமையை நாடலும் யோகம்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 48

கூர்த்துவி ழிப்பதோர் யோகம்—மலக்
குண்டியை நாடியே குவிவதும் யோகம்
மல்லர்கள் போலத்தன் னுடனை—முற்றும்
மடக்கியே யோடிப்பதும் மகத்தான யோகம்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 49

செவிநாசி யடைப்பதும் யோகம்—சொல்லுஞ்
செவ்விரல் கண்வாயைச் சேர்ப்பதும் யோகம்
ஆண்தன்மை யறுப்பதும் யோகம்—அடி
ஆதார மாறினி லமர்வதும் யோகம்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 50

இவ்வண்ணங் கற்றறி மோழை—உழைத்தும்
இப்பாரிற் போன்னடி யேற்காமற் போனூர்
உருவண்ணச் சிறியேனை யேந்தி—ஊமை
உய்வண்ணஞ் சிவயோக மொன்ருகச் சொன்னூர்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 51

## மெய் ராஜயோகம்

சற்குரு தாளிணைக் கண்டு—முற்றுஞ்
சரணர விந்தமே சதமென்று போற்றி
குருகாட்டுங் குறியிலே நின்றால்—சிவ
குருயோக மிருதயங் குதிகொள்ளு மென்றார்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 52

சாகும்ப ழக்கமே யோகம்—சற்றுஞ்
சாவைய றியாமற் சாவதோ யோகம்
செத்துப்ப ழகுதல் யோகம்—சேகத்திற்
செத்தாரைக் காணவுந் திரிவதோ யோகம்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 53

போகத்திற் சிக்கலோ யோகம்—போகம்
போதுமென் னும்பர போதம்நல் யோகம்
யோகியைக் காண்பதே யோகம்—உன்னில்
ஓங்கிய வேகாக்கா லுணர்வதே யோகம்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 54

உயிரைப்பி ரிப்பதே யோகம்—உயிர்
உடலைப்பி ரியாம லோட்டலோ யோகம்
உயிரைப்பு ரத்தலே யோகம்—உற்ற
உடலைப்பே ணுமலோ றப்பதோ யோகம்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 55

உடலைவே திப்பதே யோகம்—நாற்ற
உடலைச்சு வேதே வுற்றார்நல் யோகம்
உடலையு தைப்பதே யோகம்—தலை
ஒட்டையு டைப்பதோ ஓகோகோ யோகம்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 56

மூன்றான படியாகும் யோகம்—முற்றும்
முடிவாகப் பழகவே முழுமனம் வேண்டும்
முழுச்செயல் முயற்சியும் வேண்டும்—மேலும்
முற்றறி நாதனின் முழுப்பணி வேண்டும்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 57

மெய்யான பக்தியும் வேண்டும்—மெச்சும்
மேலான அறுசுவை மிகுபோகம் விட்டுப்
பழகுதல் கஷ்டத்தை யுன்னி—புல்லர்
பரசிவ யோகத்தைப் பயந்துகை விட்டார்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 58

சங்கரர் யோகியோ என்பார்—சற்றுஞ்
சற்குரு சங்கரர் சார்வழி செல்லார்
சங்கரர் பரகாய வோட்டம்—சாற்றுஞ்
சத்திய சிவயோகச் சார்பினு லன்றோ
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 59

யோகமு மன்றியோ ஞானம்—எந்த
யோக்கியர் சொன்னாரிவ் வுன்னத ஞானம்
யோகமே காய்நிக ராகும்—முத்தர்
யோகமுங் கனிவுற வற்றாரே ஞானம்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 60

மனப்பேயைக் கொன்றல்லோ ஞானம்—முற்றும்
மனோநாசஞ் செய்தவர் மகராஜ யோகி
மற்றையோர் ஞானத்தைப் பேசி—வீணாய்
மதிகெட்டு உழல்வாரே மரணநா ளன்று
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 61

சாற்றுவார் சாஸ்திரக் குப்பை—வாயால்
சாதன சதுட்டய சட்டமுங் கற்ருர்
சற்றேனு மதிலொன்று தேருர்—சட்க
சம்பத்தை யடையாமற் சரிஞானி யென்பார்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 62

சாஸ்திரப் பூட்டையு மறியார்—சட்க
சம்பத்தும் யோகத்தாற் சார்வது மன்ருே
பழகியும் பார்த்தது மில்லை—சிவ
பதிநண்ணுஞ் சித்தரின் பாதமுங் காணுர்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 63

நித்திய வனித்தியப் பொருளை—அவர்
நிண்ணய மாகவே நெஞ்சினிற் காணுர்
நித்தியன் கூடஸ்த னென்பார்—அதை
நிச்சய மாக்கவே நேர்வழி காணுர்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 64

தன்னைய றிந்தபின் ஞானம்—என்று
தன்னையு மறியாமல் தலைவனைக் காணுமல்
தானுமே யதுவாகு மென்பார்—கடைநாள்
தலைகெட்ட பித்தர்போல் தாழ்ந்துமே போவார்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 65

அழிவது உடலமே யன்றி—ஆன்மா
அழிபொரு ளாவதும் அழிப்பது மன்று
இவ்விதந் தன்னையும் அறிதல்—எங்கள்
இறையருட் சித்தரின் இதயோகப் பேறே
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 66

அருவுரு வாகுமே யேன்பார்—பரம்
அருவாய சிவனையும் அறியாமற் போவார்
உறவுகோல் நட்டுமே யுணர்வு—தாம்பின்
உருவாகுஞ் சிவனையும் உருகியே பற்றார்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 67

சுருதியும் யுத்தியு மேன்பார்—ஞானஞ்
சொல்லரு மனுபவஞ் சுரக்காம லுண்டோ
எவ்வித முய்வித மவர்க்கே—இதை
எண்ணியே பார்க்காம லேத்தியே வாழ்வார்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 68

என்னவு பமானஞ் சோல்வேன்—இகத்தீர்
எந்தையோ கத்தையேன் னுளடை வீரோ
சாகாத கல்விக் கழனி—சாருஞ்
சாக்காடு வருமுன்னே சாலோட்ட வாரும்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 69

## மெய்த்தவம்

முத்தரைக் காண்பதே காக்ஷி—முதறி
முத்தருங் காட்டிலே முடங்கவு மாட்டார்
காட்டிலு மேன்னகாண் வேலை—வீட்டைக்
காட்டிக் கொடுக்கவே கலந்துமே வாழ்வார்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 70

காட்டிலோ ளிப்பதோ ஞானம்—கண்ணிற்
காணாத லைவதுங் கடுமல கன்மம்
நாட்டிலி ருந்துபா ரேன்றார்—நடு
நாட்டிலி ருக்குதே நாதாந்த போதம்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 71

வேஷத்தா லாவது மென்ன—வெளி
வேஷமும் வேண்டாநால் வேதமும் வேண்டாம்
கொண்டவுன் கோலத்தைக் கொள்ளு—கை
கொண்டவுன் குருபாதங் கூடியே நில்லு
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 72

பொன்வெள்ளி செய்தாலு மென்ன—புவியிற்
புகழான சித்திகள் புரிந்தாலு மென்ன
வாய்மூடி யிருந்தாலு மென்ன—வாயால்
வாதங்கள் பேசியே வாழ்ந்தாலு மென்ன
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 73

உடையைத்து றந்தாலு மென்ன—உள்ள
ஊணையும் நீத்துவு றங்காம லென்ன
மலையேறி வாழ்ந்தாலு மென்ன—மண்ணில்
மதிக்கவே குழிதோண்டி மறைந்தாலு மென்ன
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 74

மாந்தரை வைதாலு மென்ன—மையல்
மாதரைத் தள்ளியே மகிழ்ந்தாலு மென்ன
ஈதெல்லாம் மாதவ மல்ல—இயமன்
ஈரலைச் சுடுஞான எரிதவஞ் செய்மின்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 75

## மெய்யுபதேசம்

உபதேச மென்பது சொல்லோ—உன்
உயிரையுங் காக்குநல் லுயர்தேச மென்ற
சாலோகங் காண்பது மன்றோ—சான்றோர்
சாகாத வரம்பேணுஞ் சார்பினைப் பற்றும்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 76

உபதேசங் காதுக்கோ வூட்டும்—உண்மை
உபதேசி உடலுக்குள் உயிரினைக் காண்பான்
உபதேசம் உயிருக்கே யாகும்—உண்மை
உபதேசம் உன்னுக்குள் உயிரினைக் காட்டும்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 77

உபதேசங் கேட்டபே ரையா—உங்கள்
உபதேசப் பலனையா னுணரவே சொல்மின்
உபதேசங் கண்டீரோ யில்லை—உரைக்கும்
உபதேசம் வீணல்லோ உற்றது சொன்னேன்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 78

தலைவிதி யெழுத்ததைத் துடைத்து—நன்னிற்
தவமதி பூரணத் தாயூமை யெழுத்தை
உபதேச வாயிலாற் காண—உண்மை
உபதேச நாதனை யூருராய்த் தேடும்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 79

விதிமதி யென்றுன ரெண்டில்—விகற்ப
விதிபோலே வாழ்வார்க்கு விழல்மதி யாகும்
மதியையே பற்றியுன் விதியை—மாற்றி
மகிழவே யுபதேசம் மகரிஷி யருள்வார்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 80

## மெஞ்ஞானம்

எதற்காக ஞானமு மென்றார்—அதை
எங்குமே காணும லேதேதோ சொன்னேன்
பெயர்த்துநீ பிறவாமை யென்றார்—பெரியோர்
பேசாத ஞானத்தைப் பேச்சாலும் விண்டார்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 81

மெய்பொய்யைப் பிரித்துமே காட்டும்—வேதம்
மெய்யாகும் உடலான வேதத்தைப் போற்றி
வேதாந்த வெளியொளி கண்டு—வேத
வேதாவை யறிவதே விகற்பமில் ஞானம்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 82

ஞானமென் றுலதது பேச்சோ—நம்மில்
நானுநீ யென்றதை நாடலு மன்றே
கண்டவர் யாரேனுஞ் சொல்லும்—உங்கள்
கணக்கருந் தாதையிற் கண்டவ ருண்டோ
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 83

கண்டவ ருங்களி லில்லை—காணுது
கண்டவ ரென்பீரேற் காரணங் கேட்பேன்
கண்டவர்க் கறிகுறி சொல்லும்—கண்டங்
கடந்தவ ரல்லாமற் காண்பாரோ மற்றோர்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 84

கண்டவர்க் கறிகுறி யுண்டு—கங்கை
காரண நாயகர் காலடி போற்றிஞ்
சிறுவனுன் சொல்வதைக் கேளும்—திவ்ய
சிரகிரி விளங்கிடுஞ் சிவபரன் சொல்லை
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 85

மார்க்கண்டன் கண்டவன் றனே—மற்றோன்
மார்க்கத்தை யென்னென்று மதித்துப்பார்த் தீரோ
காணுமல் எஞ்ஞான்றும் பற்றும்—எம
கண்டத்தைக் கடக்கவுங் கற்றீரோ நீரும்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 86

கடந்தவன் மகரிஷி யன்றோ—வள்ளி
காமுறும் நாயகன் காமீலாய் வந்து
எங்களை யாட்கொண்டு தேற்றி—மலம்
எங்களைத் தொடராம லெப்போதுங் காத்தார்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 87

## மெய்ப்பேறு

குருபாதங் கண்யோன் பெற்ற—கோதில்
குணம்பெறு வனுபவங் கூறிடக் கேண்மின்
ஒருபாதம் பாரினில் ஊன்றி—உகந்த
உறுபாதஞ் சிரசின்மேல் உயரவுங் கண்டேன்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 88

தன்னிலே தன்னைத்தா னுணர—தமியேன்
தன்னகந் துறந்தநல் தணிகையர் சுதனைத்
திட்டமாய்ப் பற்றவே யவரும்—என்னில்
திசையில்லா தலைவாயில் திறந்துமே காட்டி
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 89

இருந்ததை யிருந்தாப்போ லிறுத்தி—ஏக
இரும்போட்டற் கல்லாலின் ஏழிலடி தங்கி
அருந்தவ நெற்றிக்கண் காட்டி—அறிய
ஆருயிர் இருதய அடிநிலை காட்டி
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 90

தில்லையின் அம்பலக் கூத்தும்—என்னுள்
திருவான சூக்குமந் தெளிவதாய்க் காட்டி
உயிராகும் நந்தியின் மூலங்—காட்டி
உருவாமுன் உறைந்தநல் உருவமுங் காட்டி
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 91

இல்லறம் என்னிலே காட்டி—இசைந்து
இல்லாளுங் காமத்தை யிறுக்கவுங் காட்டி
எட்டுடன் ரேண்டான நிலையும்—எண்ணி
எட்டான கோணமு மேன்னுள்ளே காட்டி
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 92

அஞ்சான மூன்றுமே ரேண்டும்—அறிந்தோர்
அஞ்சாத நஞ்சையும் அறியவே காட்டி
பஞ்சாக்க ரக்கூட்டு நிலையும்—பாசம்
பஞ்சுபோ லேரிகின்ற பதியிடங் காட்டி
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 93

நிலைசரண வாலயங் காட்டி—தலைமேல்
நிலைகாலுங் கால்தலை நீதமுங் காட்டி
இவ்வண்ண மேளியேனைத் தேற்ற—ஏழை
இன்றயோனின் போன்னடி யேற்றுக்கோண் டேனே
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 94

இருட்குரு தீக்ஷையைக் கேளும்—திரண்ட
இருதய மேன்பதில் இயல்ரேத்தஞ் சேரும்
எழிலான மாமிசப் பிண்டம்—என்ற
இழிவாகு முபதேசம் உரைத்தாரே மற்றோர்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 95

இறைகுரு என்னையுங் கூட்டி—என்னில்
இருதயக் குகைதிரை எரிந்திடக் காட்டி
இருதயப் பிரகாசச் சோதி—இது
என்னுயிர் பரனுமே இருப்பிட மேன்றார்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 96

கண்டநா னென்னையு மறந்து—கதி
காட்டின காமீலின் காலடி வீழ்ந்து
கதிபெற்றேன் பதியுற்றேன் கண்டு—கரை
காணாத கயவரும் காணாத காக்ஷி
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 97

பாற்கடல் மத்தியில் மாலின்—பள்ளி
பார்க்கவும் விரும்பாதார் பாரினி லுண்டோ
பாதியைப் பார்பதி தேவி—பற்றும்
பரமனைக் காணவே பதுங்குவா ருண்டோ
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 98

தூணினைப் பிளந்துமே வந்த—திவ்ய
தூயமால் சிம்மத்தைத் துதித்தவ ருண்டோ
சித்தர்சூழ் வாலைதன் மைந்தன்—சிவ
சுப்பிர மணியனைச் சுமந்தவ ருண்டோ
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 99

இத்தனைக் காக்ஷியு மேன்னில்—எந்தை
இகபர ரக்ஷக ரேழில்குரு நாதர்
காட்டிக் கோடுக்கவே நானும்—கையிற்
காணுநன் னேல்லிபோற் கண்ணாரக் கண்டேன்
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 100

மேய்த்தவர் போற்றுஞ்சன் மார்க்க—நாதர்
மேய்யடி சூடுவோர் வேமல மற்றார்
போய்வளர் நேஞ்சரை நீங்கி—நானும்
போய்யிலா மேய்யடி போற்றிக்கோண் டேனே
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 101

மாசிலா மணியென்னும் அடியேன்—குரு
மார்க்கநன் ஞதரின் மலர்ப்பதம் போற்றி
அன்பான நூறுமோர் மூன்றை—சீடன்
ஆனந்தக் களிப்பினு லறைந்தது மெய்யே
சத்தியஞ் சத்தியங் கேண்மின் (குரு) 102

குருவரு ளடைவிக்கு மிந்நூல்—குற்றங்
குறையறக் கற்கவே குவலய மோங்குழ்
இறைவழி நிற்குமோர் சித்தர்—ஞான
இணையடி கொண்டுநா மென்றுமே வாழ்வாம்
சத்தியஞ் சத்தியங் கேண்மின்—குரு
சரணடி சென்னியிற் சாரவுஞ் செய்மின் 103

வாழ்க மெய்வழி மார்க்கநன் ஞதரும்
வீழ்க வான்கன்னி விந்தமே ரோங்குக
தாழ்க காமமேன் சற்குரு நாமமே
சூழ்க வேற்கரந் தோட்டுணை மல்கவே

“காவா வெழுநிலையின் காமீல் திருப்பாதம்
நோராம் வழியெனவே நில்.”

—ஞானக்குறள்.

GOLDEN & CO.
MADRAS.

1936